**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 729/2025** Date: 20.01.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 1** |
| Name | : | சிவா |
| Father's Name | : | கிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 20.01.2026.

**முதல் விசாரணை**

நான் மாதேமங்கலத்தில் குடியிருந்து கணினி உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.10.2025 ம் தேதி காலை 10.00 மணிக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் பணிக்கு சென்றபோது தமிழ்நாடு கிராம வங்கியின் வாசலில் எனக்கு சொந்தமான TN 29 BA 5944 என்ற பதிவெண்கொண்ட Yamaha Fascino இருசக்கர வாகனத்தை நிறுத்தியிருந்தேன். நான் அன்றைய தினம் பணிமுடித்துவிட்டு இரவு 7.30 மணிக்கு நான் வாகனத்தை நிறுத்தியிருந்த இடத்தில் பார்த்தபோது எனது வாகனத்தை காணவில்லை. அக்கம் பக்கம் தேடிப்பார்த்து வாகனம் கிடைக்காததால் அதே நாள் தருமபுரி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் அ.சா.ஆ.1 ஆகும்.** அதன் பின்னர் 15.10.2025 ம் தேதி தருமபுரி நகர காவல் நிலையத்திலிருந்து எனது வாகனம் கிடைத்துவிட்டதாகவும், அதை அடையாளம் காட்டும்படி கூறியதன் அடிப்படையில் நான் காவல் நிலையம் சென்று எனது வாகனத்தை அடையாளம் காட்டினேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்திலுள்ள வாகனம் தான் காணாமல் போனதாகும். **எனது வாகனம் அடங்கிய புகைப்படம் அ.சா.ஆ.2 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

1. எனது அலுவலகத்திலிருந்து தருமபுரி நகர காவல் நிலையம் சுமார் 3 Km தொலைவிலுள்ளது. எனது அலுவலக வளாகத்திற்குள்ளாக இருசக்கர வாகனம்

நிறுத்திமிடம் உள்ளது என்றால் சரிதான். இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் பாதுகாப்பிற்காக காவலர்கள் யாரும் நியமிக்கப்பட்டுள்ளதார்களா என்றால் இல்லை. நான் வண்டி காணாமல் போனதற்கு எத்தனை நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் அன்றைய தினமே புகார் அளித்தேன். புகாரை நான் கைப்பட எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை, தட்டச்சு செய்து கொடுத்தேன். நான் தட்டச்சு செய்துகொடுத்த புகாரில் பெறுநராக மாவட்ட கண்காணிப்பாளர், தருமபுரி காவல் கண்காணிப்பாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனது வாகனம் யாரால் எடுத்து செல்லப்பட்டது என்று தெரியாது என்றால் தமிழ்நாடு கிராம வங்கியில் பொறுத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவு மூலம் தெரிந்துக்கொண்டேன். எந்ததேதியில், யார் முன்னிலையில் கண்காணிப்பு கேமரா பதிவுகள் பார்க்கப்பட்டது என்றால் என் முன்னிலையில் 14.10.2025 ம் தேதி பார்க்கப்பட்டது. தமிழ்நாடு கிராம வங்கியில் பணிபுரிந்த ஊழியர்களை கண்காணிப்பு பதிவுகளை பார்த்தபோது விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார்களா என்றால் செய்தார்கள். எனது வாகனம் எந்த தேதியில், எந்த இடத்தில், யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.01.20 16:53:54 +0530

**<u>DEPOSITION OF WITNESS</u>**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 729/2025** Date: 20.01.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 2** |
| Name | : | ரமேஷ் |
| Father's Name | : | துரை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 20.01.2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தருமபுரி, காந்திநகரில் குடியிருந்து ஊரக வளர்ச்சித்துறையில் வேலை செய்து வருகிறேன். எனது அலுவலகத்தில் வேலைசெய்யும் சிவா என்பவரின் Yamaha Fascino இருசக்கர வாகனம் காணாமல் போனது சம்பந்தமாக புகாரின் பேரில் தருமபுரி நகர காவல் நிலைய போலிசார் எங்களது ஊரக வளர்ச்சித்துறை அலுவலகத்திற்கு 14.10.2025 ம் தேதி பகல் சுமார் 1.00 மணிக்கு வந்திருந்தார்கள். போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு அக்கம் பக்கமிருந்த விவரங்களை குறித்துக்கொண்டார்கள் அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் சின்னசாமி என்பவரும் கையொப்பம் செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வைமகஜர் அ.சா.ஆ.3 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 எனது அலுவலகத்தில் என்னுடன் பணிபுரியும் நபர் என்றால் சரிதான். அ.சா.1 வாகனத்தை எங்கு நிறுத்தியிருந்தார் என்ற விபரம் தெரியாது என்றால் சரியல்ல, கிராம வங்கியின் முன்னால் நிறுத்தியிருந்தார். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்றவிபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது என்னிடம் வெற்று தாளில் பெற்ற கையொப்பத்தை வழக்கிற்கு ஏற்றால்போல் மாற்றிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக போலிசார்

கேட்டுக்கொண்டதற்காக வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.01.20 16:54:00 +0530